555

..ல 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No




வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 10—11—46 வியஹு அற்பசி 25உ ஞாயிறு | இதழ் 15

# புதிய உலகம் தோற்றிய லெனின்

ருஷ்யாவில் ஜனங்களைத் துன்புறுத்தி வந்த முடியரசை வீழ்த்தி, உண்மையான குடியரசை ஸ்தாபித்த லெனின் ஸிம்பர்ஸக் என்ற ஊரில் கீர்த்தி வாய்ந்ததோர் குடும்பத்தில், 1870-ம் வருஷம் பிறந்தார். சிறுபிராயமுதல் தேசமக்களின் பரிதாபத்தைக் கண்ணுற்றுக் கலங்கினார். அப்பொழுதே எல்லாத் துறைகளிலும் அவர்களை வாட்டிவந்த இன்னல்களைப் போக்க வேண்டுமென்ற விடுதலை வேட்கை அவருடைய மனதில் வேரூன்றிவிட்டது. சொந்த ஊரில் ஒருதேசப் பயிற்சிசாலையிற் சேர்ந்தார்: அவருடைய திறமையைப் பாராட்டி ஒரு தங்கப்பதக்கமும் அளிக்கப்பட்டது. பிறகு காஜான் சர்வகலாசாலையிற் சேர்ந்து கல்வி கற்கலானார். சர்க்காருக்கு எதிராக ஏற்பட்ட மாணவர்களின் கிளர்ச்சியில் சேர்ந்ததற்காக வெளியேற்றப்பட்டார். பதினேழாவது வயதில் அவருடைய சகோதரனாகிய அலெக்ஸாண்டர், ஜார் மன்னனை (மூன்றாவது அலெக்ஸாந்தரை)க் கொல்ல முயற்சித்ததாகத் தூக்கிலிடப்பட்டார். அதையும் வெகுவாய்ப் பொருட்படுத்தாது, தம்முடைய உயரிய நோக்கத்திலேயே ஊக்கங்கொண்டு உழைக்க ஆரம்பித்தார். பிட்ரோகிராட் சர்வகலாசாலையைச் சேர்ந்து 1891.ல் சட்டம், பொருளாதாரம் முதலியவைகளைக் கற்கலானார். பிறகு காரல் மார்க்ஸ் இயற்றிய நூல்களிலேயே அதிக கவனஞ் செலுத்தலானார். ரஷ்யாவின் இராஜ்யப் பொருளாதார அபிவிருத்திக்கும், பொதுவாக உலகின் முன்னேற்றத்திற்கும் மார்க்ஸின் கொள்கைகள் எவ்வாறு இன்றியமையாதனவென்று ஆராய்ச்சி செய்யலானார்.

1894முதல் தான் தீவிரமான முறையில் பிரசாரத்திலீடுபட்டார். அப்பொழுது ஆதிக்கத்திலிருந்த கக்ஷியாரை எதிர்த்து, இரகசியமாகப் பிரசுரங்களை வெளியிட்டார். அச்சுக்கூடங்கள் அவைகளை அச்சிட மறுக்கவே, கையினாலெழுதப்பட்ட அப்பிரசுரங்கள் பரவின. அத்தருணத்தான் சட்டவிரோதமான "தொழிலாளரின் விடுதலைச் சங்கம்" அவரால் ஸ்தாபிக்கப்பட்டது. அடுத்த வருஷம் வஜர்பணிக்குச் சென்று திரும்புங்கால் சமூக சமதர்மவாதத்தில் அவர் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டு, கிழக்கு சைபீரியாவிலுள்ள ஸுஷெலங்கோ என்ற விடத்தில் சிறைவைக்கப்பட்டார். சிறைவாசம் கழிந்த பின்னர் ருஷ்யாவிலுள்ள பெரிய நகரர்களிலாவது, சர்வகலாசாலைகளிருக்கும் நகரங்களிலாவது அவர் வசிக்கக் கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1898-ம் வருஷத்தில் தொழிலாளரின் விடுதலைக்காகச் சங்கத்தில் அரிய தொண்டாற்றிய க்ருப்ஸ்காயா என்ற மாதை மணம்புரிந்தார். உயிருள்ளவரை பொது ஜன சேவையில் லெனினுக்கு அப்பெண்மணி அளித்த உதவி மிகவும் போற்றத்தக்கது.

ஸுஷெஸ்காவில் சிறைவாசம் செய்யுங்கால் ஏராளமான புள்ளி விவரங்களை ஆதாரமாய்க் கொண்ட "ரஷ்யாவில் முதலாளிகளின் முன்னேற்றம்" என்ற அபூர்வ நூலை இயற்றினார். 1899 'சிறுபொறி பெருந்தீ' என்ற கொள்கையைக் கொண்ட "ஸ்பார்க்" என்ற புரட்சிப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தலானார். ஜார் அரசனின் அக்கிரமத்தை யொழிக்க வேண்டி நேர்முகமாய்ப் போராட ஒரு மத்தியக் கட்சியும் ஸ்தாபிக்கப்பட்டது.

1905ம் வருஷம் ஏற்பட்ட ரஷ்ய ஜப்பானியப் போரில் தொழிலாளர் ஈவிரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்டனர். அதனால் விவசாயிகளுக்குள் பரபரப்பு ஏற்பட்டது. இராஜீய வேலை நிறுத்தங்களும் அமைதியின்மையும் நாடெங்கு அதிகரித்தன. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றவாறு, லெனின் அக்குழப்பத்தினிடையிலேயே, ஜார் அரசருக்கு விரோதமான கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, பலாத்காரமாய் அவருடைய அநியாய ஆட்சிக்கு உலைவைத்து தேசத்தையும் ஜனங்களையும் சீர்திருத்த வேண்டி, தொழிலாளரையும், விவசாயிகளையுங் கொண்ட பெரியதோர் இயக்கத்தின் மூன்று முக்கிய நோக்கங்களைத் தெளிவாய் கீழ்க்கண்டவாறு வெளியாக்கினார்.

1- உண்மையான இராஜீய சுதந்திரத்தை ஜனங்கள் தற்காலிகமாகவாவது கைப்பற்ற வேண்டும்.

2. வலுவுள்ளனவாயும், தொழிலாளர், விவசாயிகள், இராணுவ வீரர்கள் இவர்களைக் கொண்டனவாயுமுள்ள, கட்டுப்பாடுள்ள ஸோவியத் புரட்சி ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும்.

3. ஜனங்களிடம் பலாத்காரத்தைப் பிரயோகிப்பவர்களை, பலாத்கார முறையிலேயே ஜனங்கள் நசுக்கிவிட வேண்டும்.

புரட்சி ஸ்தாபனங்கள் வளர்ந்தோங்கின. அவ்வருஷத்தினிறுதியில் (டிசம்பர்) மாஸ்கோவில் பெரியதோர் புரட்சி கிளம்பியது. ஆனால் மற்ற நகரங்களிலும் ஏககாலத்தில் புரட்சிகளில்லாததாலும், இராணுவத்தினரின் பரிபூரண ஆதரவு இல்லாமையாலும், அப்புரட்சியைச் சர்க்கார் சிரமமின்றி அடக்கிவிட்டனர்.

இப்புரட்சிகளில் தான் லெனினுக்கு எதிர்ப்பு அதிகரித்தது. அதுவரை சகாக்களாயிருந்த சிலர் பலாத்காரப் புரட்சிக்குப் பயந்து, அவரை எதிர்த்தனர். அரசாங்கத்தாரின் அடக்குமுறை ஒருபுறம், மென்ஷிவிக்குகள் என்று அழைக்கப்பட்ட கோழை வீரர்களின் எதிர்ப்பு ஒருபுறம். இவையிரண்டையும் எதிர்த்து போராடிய லெனின் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமன்று. 1912ம் வருஷம் தொழிலாளரியக்கம் புத்துயிர் பெற்றுத் தழைத்தோங்கியது. அப்பொழுது அவர் ஸ்தாபித்த 'பிரவாடா' என்ற பத்திரிகை, போலீஸாரின் கோபாக்கினியையும், சர்க்காரின் பறிமுதலையும் மீறி, ஜனங்களிடையே புரட்சிக் கொள்கைகளைப் பரப்பி வந்தது. அவ்வருஷத்திலேயே ஆஸ்ட்ரியா தேசத்துப் போலீசார், அவரை ஒரு இரஷ்ய வேவுகாரனென்று கருதி ஸ்விட்ஜர்லாந்துக்குப் பிரஷ்டம் செய்தனர்

சென்ற மகாயுத்தத்தின் ஏகாதிபத்தியக் கொள்கையை அவர் தீவிரமாய்க் கண்டித்தார். ஒவ்வொரு வல்லரசும், தன்னுடைய பொருட்களையே அன்னிய தேசங்களில் விற்பனை செய்து இலாபமடையும் பொருட்டும், மற்றவர்களுடைய போட்டியைத் தகர்த்தெறியும் கெட்ட

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

# புரட்சி!

(காம்ரேட்)

நாட்டிலே எங்குபார்த்தாலும் 'புரட்சி ஓங்குக!' 'புரட்சி ஓங்குக!' என்ற முழக்கம் கேள்க்கப்படுகிறது. புரட்சியென்றாலே மக்கள் மனதில் ஒருவித மருட்சி தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுவதற்குக் காரணம் அத்தகைய கருத்திலே அச்சொல் உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. நாம் புரட்சி ஓங்க வேண்டுமென்று கூறுவது அத்தகைய கருத்தின் மீது அல்ல.

மற்றும், 'புரட்சி ஓங்குக!' 'அச்சமில்லை! அச்சமில்லை! உச்சிமீதில் வானிடிந்து வீழ்கிடினும்' என்ற வீர முழக்கமிட்டு விட்டு அதே விநாடியில் உச்சிமீது வானிடிந்து விழவேண்டாம், மழைத்துளி விழுந்தாலே போதும் ஓட்டமெடுப்பார்கள் ஒண்டிக்கொள்ள அப்புரட்சி வீரர்கள். அத்தகைய வீரர்கள் கூறுவதுபோன்ற 'புரட்சி ஓங்குக' என்று நாம் கூற முன்வரவில்லை.

நாம் கூற விரும்புவதெல்லாம், மக்கள் கருத்திலே புரட்சி தோன்ற வேண்டும் வாழ்க்கை முறையிலே புரட்சி ஏற்பட வேண்டும், செயலில் புரட்சி காணவேண்டும் என்பதேயாகும். ஏன் புரட்சி காண வேண்டும்? என்ற கேள்வி எழக்கூடும். இதற்கு சமாதானம் சொல்லியாகவேண்டும். என்னவென்றால்:

மக்கள் இவ்வுலகில் தோன்றி எவ்வளவோ வருடங்கள் ஆகிவிட்டன. இயற்கையை மாற்றியமைக்கும் சக்தியையும் மக்கள் பெற்று விட்டனர். இருந்தபோதிலும் மக்களில் பெரும்பாலோர் படும் துன்பங்களை எண்ண முடியவில்லை. எண்ணும்போது மனம்பதறுகிறது. மனிதனும் உயிருள்ள ஒரு பிராணி. இன்னும் உயிருள்ள பிராணிகள் உலகில் எத்தனையோ வாழ்கின்றன. அவைகள் யாவும் இன்புற்று வாழ்கின்றன. இன்றைக்கில்லையே, நாளைக்கில்லையே என்ற கவலையற்று திரிகின்றன. மனிதன், தன்னை மற்ற உயிருள்ள பிராணிகளைவிட ஒருபடி உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்கிறான்; தனக்கு மற்ற பிராணிகளுக்கில்லாத சிறப்பு அதாவது பகுத்தறிவு இருக்கிறது என்று பெருமையடித்துக்கொள்கிறான். ஆனால், மனிதன்தான் மற்ற பிராணிகளைவிட மோசமான நிலையில் இருக்கிறான். ஒரு சிலர் உன்னத வாழ்வு வாழுவதையும் இந்திர போகத்தை அனுபவித்து வருவதையும் பெரும்பாலான மக்கள் துன்பத்திலும் கவலையிலும் மூழ்கிக் கிடப்பதையும் காண்கிறோம். இதற்குக் காரணம் என்ன? இதைக் குறித்துச் சிறிது விளக்குவதுதான் இக்கட்டுரையை எழுத முன் வந்ததின் நோக்கமாகும்.

மனிதன் துன்பப்படுகிறான்—கஷ்டப்படுகிறான். துன்பத்தைப் போக்க கஷ்டத்தைப்போக்க உலகில் எவ்வளவோ முயற்சிகள் செய்யப்பட்டாய் விட்டது; எவ்வளவோ உபதேசங்கள்! எவ்வளவோ சன்மார்க்க போதனைகள்! எவ்வளவோ ஹிதோபதேசங்கள்! எவ்வளவோ வழிபாடுகள்! எவ்வளவோ மதங்கள்! எதுவும் இதுவரை மனிதனை துன்பக் கடலிலிருந்து கரை சேர்த்ததாக எண்ணுவதற்கில்லை. ஏன்? இவ்வளவு காரியங்களும், இத்துன்பத்திற்கு—இந்நிலைக்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்க்காமலே அதைக் குறித்து ஆராயாமலே, அதன் காரணத்தை வெளியிட துணிவு பிறக்காமலே செய்யப்பட்டு வருவதினாலே யாதும் பயனில்லை.

முதலாவது காரணம், உலகில் உயிர் வாழும் பட்சிகளோ, விலங்குகளோ நீர் வாழும் பிராணிகளோ இவ்வுலகம் பொது எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், தங்களுக்குத் தேவையானதை எங்கிருந்தாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று கருதி வருகின்றன. அதற்குத் தடையில்லை. உதாரணமாக பட்சிகளில் எதைவேண்டுமானாலும் எடுத்துக்கொள்வோம். அது தன்னிஷ்டம்போல் பறந்து செல்லுகிறது, தனக்குத் தேவையானவற்றை தேடி எடுத்துக்கொள்கிறது. எந்தப் பட்சியும் தடுப்பதில்லை. அதுபோலவே மிருகங்களை எடுத்துக்கொண்டால், காட்டில் தம்மிஷ்டம்போல் ஓடி ஆடித் தங்களுக்கு வேண்டியவற்றை பிடித்துக்கொள்கின்றன. அதுபோலவே நீர் வாழும் உயிர்களும். ஆனால் மனிதனோ என்றால், அவ்வாறு செய்வதற்கில்லை. பகுத்தறிவு இருக்கிற காரணத்தினால் இப்பொதுவான உரிமையைத் தடுக்கிறான். மனிதன் தன்னிஷ்டம்போல் இப்பரந்த நிலபரப்பில் எங்கு வேண்டுமானால் சென்று தனக்கு வேண்டியவற்றைத் தேடிக்கொள்ள முடியாது. இதற்கு தடையிருந்து வருகிறது. இவ்வுலகம் மனிதர் யாவருக்கும் பொது என்ற நிலைமாறிவிட்டது. ஒவ்வொரு இடத்தைத் தனக்குச் சொந்தம், பிறர் நுழையக்கூடாது என்று தடை ஏற்படுத்தி விட்டனர். வல்லமையுள்ளவன்—புத்தியுள்ளவன் பெரும் நிலப்பரப்பை தனக்கு சொந்தம் என்று செய்துகொண்டு மற்றவர்களுக்கு அதில் இடமில்லை—உரிமையில்லை என்று செய்துவிட்டான். அதாவது உலகம் பொது என்றிருந்த நிலை மாறி தனியொருவனுக்கு சொந்தம்—உடமை என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அந்த நிலைமை ஏற்பட்டது தான் முதற் காரணம் துன்பங்களுக் கெல்லாம்.

இரண்டாவது, உழைப்பும் பயனுமாகும். மக்கள் உழைக்கிறார்கள்; தூங்குகிற நேரம் போக மற்ற நேரமெல்லாம் உழைக்கிறார்கள், இரத்த வியர்வை சொட்டச் சொட்ட பாடுபடுகிறார்கள். இவ்வாறு பாடுபட்டும் வயிறார கஞ்சியில்லை; உடுத்த உடையில்லை; குந்த குடிசையில்லை; தீராதநோய் நீங்காத துன்பமும் கவலையும். ஆனால் சிலர், நெற்றிவியர்வை நிலத்தில் விழாமல், நகத்தில் அழுக்குப்படாமல், உடல் குலுங்காமல், மேனிவாடாமல், அங்கம் அசையாமல் இருக்கிறார்கள். அவர்கள், கதைகளில் சொல்லப்படும் இந்திர போகத்தைவிட மேலான போகத்தில் வாழ்ந்து வருகிறார்கள். பேரின்பத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இதற்குள்ள காரணத்தை வேத சாஸ்திரங்களிலோ, ஸ்மிருதிகளிலோ, இதிகாசங்களிலோ, புராணங்களிலோ, நீதிநெறிகளிலோ, மனு நீதிசாஸ்திரத்திலோ காணமுடியாது. இவைகள் யாவும் இந்நிலையை நிலைக்கச் செய்யத் தோன்றியவைகள். துன்பகக் கடலில் மூழ்கிக் கிடக்கிறவன் என்றும் அதில் மூழ்கித் தத்தளிக்கவும், இன்பத்தில் மூழ்கிக் கிடக்கிறவன் அதிலே மூழ்கி பேரானந்தத்துடன் வாழவேண்டும் என்ற கருத்தின் மீது உபதேசம் செய்யத் தோன்றியவைகள். ஆதலால், இவைகளின் மூலமாக, துன்பப்படும் மக்களுக்கு விமோசனத்தைக் காணமுடியாது. இதுவரை, இவைகளின் மூலமாகக் காணலாம் என்று பலர் முயன்றதின் காரணமாக, அவர்களால் உண்மையைக் காணமுடியவில்லை; துன்பத்தைப் போக்க முடியவில்லை; அவதிப்படும் மக்களை கரைசேர்க்க முடியவில்லை. எனவே தான் சொல்லுகிறோம், இவைகளின் மூலமாக வழிகாண முடியாதென்று. மற்றபடி இதற்குக் காரணம் என்ன? விளக்குகிறோம், சிந்தித்துப் பாருங்கள்.

மன் தோன்றிய நாளிலே மனிதன் தோன்றினான் என்று சொல்லப்படுகிறது. அந்நாளிலே, அதாவது கற்கல் காலத்திற்கு முன் காலத்திலே, அவனவன் இப்பரந்த உலகில் தன் தன்னிஷ்டம்போல் சுற்றித்திரிந்தான்; தனக்கிஷ்டமானவற்றை தேடி எடுத்துக்கொண்டான்; தேவைக்கானவை தாராளமாக கிடைத்தது. தேவையும் இந்நாளிலுள்ளது போலல்ல. எனினும் தேவைக்கானவை யாதொரு தடையுமில்லாது கிடைத்து வந்தது. எவரும் இவை எனக்குச் சொந்தமானது உடமையானது என்ற உரிமை பாராட்டவில்லை. அதனால் இன்புற்று வாழ்ந்து வந்தான். இன்றைக்கில்லையே என்ற கவலையில்லாது வாழ்ந்து வந்தான்.

பிறகு, காலம் செல்லச்செல்ல, மக்கட் தொகை பெருகப்பெருக, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவதற்கு இயற்கையான தடைகள், மலைகள், நீர் நிலைகள் போன்றவைகள் இருந்ததினால், அவைகளைத் தாண்டிச்செல்லும் ஆற்றலும் அறிவும் இல்லாதிருந்ததினால், தனக்குத் தேவையானவற்றை செயற்கை மூலமாக உற்பத்தி செய்ய நேரிட்டது. உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கினான். உடை தயாரிக்கலானான். இதற்கான கருவிகளைச் செய்யலானான். போக்குவரத்து சாதனங்களை கண்டுபிடிக்கலானான். குடியிருக்க வீடு கட்டத் தொடங்கினான். குடி தண்ணீருக்காக கிணறு, குளம் முதலியவைகளை வெட்டத் தொடங்கினான். இப்படியாக தேவைக்கானவற்றை தனது அறிவு கொண்டு தனது உழைப்பின் மூலமாக செய்யலானான்.

ஆரம்பத்தில், இவ்வுழைப்பு அனேகமாக சமமாகவே பாவிக்கப்பட்டது. தனித் தனியாக ஒவ்வொருவனும் தனக்குத் தேவையானவற்றைத் தேடிக்கொள்ள முடியாது என்பதை புணர்ந்தான். ஒவ்வொரு பகுதியிலுள்ளவர்களில் ஒரு சிலர் பயிர்த் தொழில் செய்வதும், ஒரு சிலர் உடை தயாரிப்பதும், ஒரு சிலர், இவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் செய்வதுமான இதுபோன்ற ஒவ்வொரு காரியமும்

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்

# இந்து மத ஆபாசம்

## புராணங்கள் பேரால் மக்கள் அறிவைக் கெடுப்பதா ?

(திருமதி ஆர். அன்னபூரணியம்மாள்)

அன்பிலதம் தோழர்களே !

உலகெங்கணும் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற ஒலி தொனித்துக்கொண்டிருப்பதையும், விஞ்ஞானம் என்னும் இயற்கை சாஸ்திரத்தின் மூலம் பகுத்தறிவு பரவி, மனிதன் எவ்வெவ் வழிகளில் உழைத்து சுகவாழ்க்கையையடைதல் கூடும் என்பதை தினே, தினே ஆய்ந்து முன்னேற்ற மடைவதில் கண்ணுங்கருத்துமாயிருந்து வரும் மேனாட்டாரின் விடா முயற்சியின் பயனையும் நாம் பிரத்தியட்சமாக அறிந்து வருகின்றோம்.

உலகில் சுதந்திர உணர்ச்சி தோன்றி, ஜனநாயகத்தத்துவம் பரவி, சமத்துவத் தென்றலும், பகுத்தறிவுப் பாஸ்கரனும் பிரகாசமாய் ஜொலித்துக் கொண்டிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில், பழமையென்பதை மிதித்தொழித்து மதக் கொள்கை என்பவற்றை உதறித்தள்ளி பகுத்தறிவின் விசாலத்தன்மையின் உதவியால் இயற்கை சாஸ்திரத்தின் துணைப் பற்றி பிரமிக்கத்தக்க சாதனங்களையெல்லாம் கண்டுபிடித்து சுதந்தரவாழ்க்கையை மேற்கொண்டும் நமக்கு வழிகாட்டிகளாகவும், உதாரண பீடங்களாகவும் மேனாட்டார் விளக்கிக் கொண்டிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில், நமது இந்தியாவில் சாதிச்சண்டை, சமயப்பூசல், தீண்டாமைக்கொடுமை, உயர்வு தாழ்வு, குழந்தை விவாகம், விதவைக்கொடுமை, அடிமைத் தன்மை, முதலிய அந்தகார இருள் சூழப்பெற்று, அல்லோல கல்லோலப்பட்டு நிற்கின்றதென்பதை உன்னும்போது எந்த பொதுநலவாதியின் உள்ளந்தான் கொதிக்காமலிருக்க முடியும்?

அத்தகைய கொடுமைகளைத் தெரிந்து மக்கள் தர்மத்திற்குச் சிறிதும் பொருந்தாக் கேடுற்ற மாக்கள் தர்மத்தை அனுஷ்டித்து அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் பாமர மக்களை கடைத்தேற்றி சமத்துவத்தைப் பரவச்செய்வது நமது சுயமரியாதை இயக்கமென்பது மிகையாகாது.

சிலர் கருதுகிறபடி சுயமரியாதை இயக்கம் சிலருடைய சுயநலத்தை யடிப்படையாகக்கொண்டு தூண்டப்பட்டு வருகின்றதென்பது மிகவும் அறியாமையாகும். மக்கள் நாகரிக எல்லையையடைந்து சமுதாயமாகச் சேர்ந்து வாழத்தொடங்கிய காலந் தொட்டே மனித சமூகத்தைச் சுயமரியாதை உணர்ச்சி பின்தொடர்ந்து வருகின்றதென்றே கூறலாம். அவ்வுணர்ச்சி தீவிரப்பட்டெழும்பாமைக்குப் பல காரணங்கள் உண்டெனினும் மிருகத்தன்மையான எதிர்ப்புகளே அதற்கு முக்கியகாரணமென்பதற்குச்சான்றுகள் பலவாம்.

சாக்ரடீஸ், காலிலோ, பிராட்லா முதலியோரின் பகுத்தறிவோடு கூடிய சுயமரியாதையுணர்ச்சியை அடக்கிக்கொண்டு வந்தது எது? மிருகபலமன்றோ? புத்தர் காலம் வரை பகுத்தறிவிற்கு இடம் கொடுக்காமல் அடக்கி இம்சித்துக் கொண்டு வந்தது எது? பார்ப்பனீயமன்றோ? புத்தர் ஒரு தாழ்ந்த வகுப்புப் பெண்ணை புத்த சங்கத்தில் சேர்த்துக் கொண்டதற்காக பிராமணர்களெல்லாம் சேர்ந்து அரசனைத் துணையாகக்கொண்டு அவரை யெதிர்த்தனரன்றோ? புத்தரது வாளாயுதம் போன்ற நுண்ணுணர்வான வாதம் அவர்களைச்சிதறடிக்காதிருந்தால் அவரது பகுத்தறிவியக்கம் இவ்வளவு தூரம் உலகில் பரந்து காணாதென்பதற்கு என்ன தடை? பார்ப்பனர்களுடைய வேதங்களைக் காதில் கேட்டால் ஈயத்தை உருக்கிச்சாய்த்தும், நாவில் உச்சரித்தால் நாவையறுத்தும் இம்சிக்கும்படி இந்து மதம் தாராளமாக வழி காட்டுகையில் அம்மதத்தை யெதிர்த்து பகுத்தறிவையுபயோகப்படுத்தினால் என்ன செய்திருப்பார்களென்பதை யோசித்துப் பாருங்கள். இராமர் காலத்தில் தவம் செய்த சூத்திரனே கொலை செயப்பட்டானென்றால், மத ஆராய்ச்சி செய்வோர்கதியென்னாகுமென்று யோசித்துப் பாருங்கள். ஆகையால் சுயமரியாதை இயக்கம் புதிய தோற்றமொன்றல்லவென்பதை ஞாபகப் படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இனி இந்திய ஜனசமூகம் ஒற்றுமையற்று, பலவித அபிப்பிராய பேதங்களோடும், எண்ணற்ற ஜாதிப்பிரிவுகளோடும், அடிமைதனத்தோடும் அலக்கழிக்கப்படும் நிலைகுலைந்து நிற்பதற்குக் காரணமாயிருப்பவை எவையென்பவை பரிசீலனை செய்வது அவசியமாகும்.

இந்தியாவில் ஜாதிபேதம் தலைகாட்டியது ஆரியர்கள் வருகைக்குப்பின்பே யென்பதை அக்காலத்தோர் வரைந்து போந்த நூற்கள் பலவாலும், சரித்திர வாயிலாகவும் நாம் திண்ணமாயறிந்திருக்கிறோம். ஆனால் ஜாதி பேதம் ஏற்படுத்தப்பட்டது எதற்காக? அவற்றில் ஏதேனும் நன்மையுண்டா? அவற்றை இவ்விருபதாம் நூற்றாண்டில் இந்தியா விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டு சீரழிய வேண்டுமா? என்பதைச் சிந்தித்துப்பார்த்தல் நமது கடமையாம்.

நாகரிகமுதிர்ந்த ஏனைய நாட்டினர் 'ஜாதிபேதம்'—நான் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் என்பதைக் குறிப்பிடும் போது நம்மை எள்ளி நகையாடுகிறார்கள். இதிலும் விசேஷமாக தீண்டாமைக்கொடுமையை என்னென்றுரைப்பது? மனிதனுக்கு மனிதன் தீண்டிக்கொண்டால் ஜாதிகெட்டுப்போய் விடுகிறதாம். தீட்டு ஒட்டிக்கொள்ளுகிறதாம்! மோட்ச வாசல் தடைப்பட்டு போய்விடுகிறதாம்! என்ன என்ன பேதமையிது?

இவ்வளவு அழுத்தமாகவும், திருத்தமாகவும் இச்சாதி பேதத்தையும் தீண்டாமைத் திமிரையும் இந்தியாவுக்குள் புகுத்தியது ஆரியர் சூழ்ச்சியே யென்பது பிழையாகுமா?

ஆசியா மைனரிலிருந்து இமயமலைக் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் புகுந்து சிந்து நதிதீரங்களில் குடியேறிய வடவாரியர்கள் சிவந்த மேனியராகவும் நம் நாட்டின் ஜாதிபேதமற்ற பூர்வீக திராவிடர்களாகும், தமிழ் மக்கள் கருமை கலந்த மாநிறத்தவராகவும் இருந்தமையால் ஏற்பட்ட நிறவேற்றுமையே வருணாச்சிரமமாக மாறி ஜாதிபேதமாக வெளிப்பட்டது. அறியாமையில் ஆழ்ந்து கிடந்த பேதை மக்களை வசியப்படுத்த மேற்குறித்த ஜாதிபேதங்களை ஆதாரமாகக் கொண்டு இந்துமத நூற்களை எழுதியவர்களெல்லாம் ஆரியர்களேயாதலால் அவர்களது சுகவாழ்க்கையையுன்னி அவர்களே உலகில் உயர்ந்த ஜாதியினராகிய பூதேவரென்றும், ஏனையோர் படிப்படியாக அவர்களுக்குத் தாழ்ந்தவரென்றும் வரைந்து கொண்டார்கள்.

இவர்களால் எழுதப்பட்டுள்ள வேதங்கள் முதல் புராணமீறாக உள்ள எல்லா நூல்களின் போக்கையும் ஆராயப்புகின் காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்த மனிதரும் அருவருத்துத் தள்ளுவார்களென்றால் அதிகம் கூறவேண்டியதில்லையென்று கருதுகின்றேன். தீத்தொழிலாகிய வேள்விக்கொடுமையும் பிராமணீயமுமே வேதங்களின் அடிப்படையான தத்வம். குதிரைமுதல் எலியீறாகவுள்ள பலவித ஜந்துக்களை வேள்வித்தீயிலிட்டுக் கொன்று, பொசுக்கி மண்ணும் மயிருமாக உண்டால் வேர்களுக்கெல்லாம் திருப்தியுண்டாகுமென்று வேதங்கள் கூறுவதுடன் மனிதரையும் கொன்று தின்ன வேதங்கள் அனுமதிக்கின்றதென்றால் அக்கொள்கையை காட்டுமிராண்டிகளும் ஏற்க அருவருப்பார்களென்பதில் என்ன சந்தேகம்? ஆனால் அவ்வித இழிதொழிலை கடைப்பிடித்தோராயும், அவ்விதம் கடைப்பிடிப்பதே தூய்மையென்று கூறுவோருமாய் ஒரு கூட்டத்தாரை எதற்கொப்பிடலாம் என்று கேட்கின்றேன்? அவர்கள் ராமராஜ்யத்தில் ஏற்படப்போகும் மியூசியத்தில் வைக்க உபயோகப்படுவார்களே தவிர, இவ்விருபதாம் நூற்றாண்டின் மியூசியத்திற்கும் தகுதியாக மாட்டார்களென்பது எனது அபிப்பிராயம். அன்றியும் "பௌண்டரீகயாகம்," "சத்தியாகம்" முதலியவற்றின் அவலவத்தைவாயால் கூறவும் வெறுப்பைத்தருகிறதென்றால் அவற்றைக் கொண்டாடும் புகழ்வோரைமனித வர்க்கத்தில் சேர்க்கவும் தகுதியேற்படுமா? அத்தகையவரைக் குருவாகக் கொள்ள வரிந்துகட்டிக்கொண்டு முன்வரும் நமது பார்ப்பனரல்லாத பெருமக்களைப் பற்றி வருந்தாதிருக்க முடியுமா? வென்றுகேட்கிறேன்.

இமயன் என்பவன் தன் புத்திரி யமுனை யென்பவளை கற்பழிக்கயத்தனித்ததாய்

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம்)

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முளைய விழ்ந்து
வாழிய வையமென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்

---


# உதயம்

மலர் 1 10—11—46 இதழ் 15


## இதற்காகவா இவ்வளவு தியாகங்கள்?

அன்னிய ஆட்சி—வெள்ளையர் ஆட்சி ஒழிந்து விட்டால் நாம் இன்புற்று வாழலாம்; சுகமாக வாழலாம்; சுதந்திரமாக வாழலாம்; உலகில் தலைநிமிர்ந்து வாழலாம் என்று இவ்வுபகண்டத்திலுள்ள ஒவ்வொருவரும் எண்ணி வந்தனர். இவ்வாறு எண்ணுவதற்குப் போதிய காரணமும் உண்டு. கடந்த 300 வருடங்களாக அதிலும் குறிப்பாக கடந்த 150 வருடங்களாக நாம் அன்னிய ஆதிக்கத்தினால், எல்லாத் துறைகளிலும் இழி நிலை அடைந்து இருக்கிறோம். உலக மக்கள் முன்னிலையில் அடிமை நாட்டானாகவே கருதப்பட்டு வருகிறோம். இதற்கு முக்கிய காரணம் நம்மை இந்நிலைக்குக் கொண்டு வந்ததற்கு முக்கிய காரணம் இந்து மதமாகிய ஆரிய மதம் என்றாலும் அன்னிய ஆதிக்கமும் முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

ஆரியர் வருகைக்குமுன் இன்புற்று சிறப்புற்று விளங்கிய மக்களைப் பிரித்து சீர்குலைத்து அவர்களுக்குள்ளாகவே பகைத்துக்கொண்டு அழிந்துபோகவும் தங்களுடைய செல்வாக்கு ஓங்கவுமான காரியங்களை எவ்வாறு ஆரியர்கள் செய்தார்களோ அதுபோலவே, பிரிட்டிஷாரும், தங்கள் வருகைக்கு முன் ஓரளவுக்கு சுகமாக வாழ்ந்து வந்த மக்களை தங்களுடைய ஆதிக்கத்தின் பயனாய் துன்பத்திற்குள்ளாக்கியும் அடிமைகளாக்கியும் பஞ்சைகளாக்கியும் வைத்து விட்டதோடு, இன்று இந்நாட்டில்காணும் கோர நிலைமைக்கு அதாவது ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு, குத்திக் கொண்டு அழியும் நிலைமைக்கு நாட்டை கொண்டு வந்து வைத்து விட்டார்கள்.

ஆரியர்கள் கைகொண்ட முறையும் பிரிட்டிஷார் கைகொண்ட முறையும் இரண்டும் ஒன்றுதான். ஆரியர்களும், நம்மை பிரித்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு இருக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டால் தாங்கள் என்றென்றும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கலாம், தங்களுடைய நிலைமை பந்தோபஸ்தாய் விடும், தங்களை இருசாரரும் வேண்டிக்கொள்வார்கள்—உதவியை நாடுவார்கள் என்று எவ்வாறு நினைத்தார்களோ அதுபோலவே பிரிட்டிஷாரும் நினைத்து வருகிறார்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது. இவர்கள் (பிரிட்டிஷார்) கையாளும் முறையும் அன்று ஆரியர்கள் கையாண்ட முறையேயாகும். இதன் பலன், நம்மவர்களுக்குள் பிளவும் பகையும் அதிகரித்து துவேஷ உணர்ச்சி வளரலாயிற்று.

எந்த அன்னியனை வெளியேற நினைத்தோமோ, எந்த அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க எண்ணினோமோ அந்த அன்னியனை வருந்தியழைக்கவும் அந்த ஆதிக்கத்தை நிலைத்திருக்கச் செய்யவும் ஆன நிலை ஏற்பட்டதுதான் மிச்சமாயிற்று. உண்மையாகவே, சுதந்திரம் விரும்புகிற எவனும், தன்மானத்துடன் வாழ விரும்புகிற எவனும் இந்நிலைமையைக் கண்டு வருந்தாமல் இருக்கமாட்டான் என்பதோடு இதற்காகவா இவ்வளவு பாடுபட்டு, போராடி வந்தது என்று ஏக்கமுறாமலிருக்கவு மாட்டான்.

இந்நிலைமை ஏற்பட்டதினால் அன்னியனுக்கும் ஆரியனுக்கும் வேண்டுமானால், நல்ல வாய்ப்பு ஏற்பட்டது; அவர்கள் பிடி இறுகலாயிற்று என்று கருதலாமேயல்லாது உள்ளபடி, இந்நாட்டின் பொதுமக்களுக்கு ஒரு சிறிதும் பயனில்லை என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏன் இவ்வாறு கூறுகின்றோமென்றால், உலகில் உள்ள ஒவ்வொரு நாடும், இன்று ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுக் கொண்டு தங்கள் தங்கள் நாட்டின் முன்னேற்றத்தில், நலத்தில் அக்கறை கொண்டு உழைத்து வருகின்றன; சுதந்திரத்தைக் காத்துக் கொள்ள திட்டமிட்டு வருகின்றன. இந்த வேளையில், நம் நாட்டில்மட்டும் இவ்வாறு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் இது எவ்வளவு தூரம் வருந்தக்கூடிய காரியமென்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதற்காகவே.

வங்கத்திலும், பம்பாயிலும், பீஹாரிலும் நடைபெறும் சம்பவங்கள் இந்நாட்டின் முன்னேற்றத்தை எவ்வளவு தூரம் பாதித்து விட்டதென்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். மதங்கள், மக்களுக்குள் நல்லொழுக்கத்தையும் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் ஏற்படத் தோன்றியதென்பது உண்மையானால், காட்டுமிராண்டிகளாய், தான்தோன்றிகளாய் வாழ்ந்த மக்களை ஒன்றுபடுத்தி கட்டுப்பாடு ஏற்படுத்தத் தோன்றியவை என்பது உண்மையானால், மனிதனை மனிதன் நேசிக்கவும், பரஸ்பரமாக வாழச் செய்யவும் தோன்றியவை என்பது மெய்யானால், மனிதனை மனிதன் பகைக்கவும் வெறுக்கவும் கொல்லவும், கொலை செய்யவும், சொத்துக்களை சூறையாடவும், கொள்ளையிடவும், தீவைக்கவுமான நிலைமைக்கு மக்களைத் தூண்டவோ உணர்ச்சியூட்டவோ செய்யுமா என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

வங்கத்திலும், பம்பாயிலும், பீஹாரிலும் நடைபெறும் சம்பவங்களுக்கும் ஐரோப்பாக்கண்டத்தில் 15ம் நூற்றாண்டில், 16ம் நூற்றாண்டில் நடந்த சம்பவங்களுக்கும் அதிக வித்தியாசமில்லையென்றே தோன்றுகிறது. அந்நாளில், இந்தியா மிக உயர்ந்த நிலையில், சமாதானமாக சந்தோஷமாக வாழ்ந்து வந்திருக்கிறது. இந்நாட்டு மக்கள் நல்லுறவுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் இன்று இத்தகைய பரிதாபத்துக்குரிய நிலையில் அதுவும், இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிந்திய நிலைக்குப்போயிருப்பதின் காரணம் என்ன? இது

பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவு என்றால் யாரால் மறுக்க முடியும்? பிரிட்டிஷார் கால்வைத்த இடத்தில்—நாட்டில் எங்கு தான் இந்நிலை ஏற்படாதிருக்கிறது? எகிப்தில் என்ன வாழ்கிறது? பாரசீகத்தில் என்ன வாழ்கிறது? ஆப்கானிஸ்தானத்தில் எந்நிலையிருக்கிறது? பர்மாவில் என்ன ஒழுங்கிருக்கிறது? சீனாவில் எங்கு சமாதானம் இருக்கிறது? ஏன்? இன்று ஐரோப்பாவின் மத்திய கிழக்குப் பிரதேசத்தில்தான் என்ன வாழ்கிறது? இந்தியாவில் மட்டும் வாழ!

இவ்வளவையும் அதாவது, மற்ற நாடுகளில் கட்சிகளுக்குள் பிளவு ஏற்பட்டு பிரிட்டிஷாரின் ஆதிக்கம்—தலையீடு அவசியம் என்று கருதும்படியான நிலை ஏற்பட்டுவருவதையும் அதனால் அந்நாடுகள் சுதந்திரமாக வாழ முடியாமல் இருந்து வருவதையும் கண்ட பிறகும், சுதந்திரமாக வாழ விரும்பும் மக்கள் அத்தகைய நிலையை இந்தியாவிலும் ஏற்படவிடலாமா? இதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டு சுதந்திர இயக்கத்தை விடுதலைப்போரை நடத்தி வந்தது? இவ்வாறு பலியிடலாமா சுதந்திர இயக்கத்தை என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

உண்மையாகவே, இந்நாட்டில்—இவ்வுபகண்டத்தில் சுதந்திரம் நிலைபெறவேண்டுமானால், மக்கள் ஒருவரை ஒருவர் பாஸ்பரமாக நேசிக்க வேண்டும்; ஒருவர்மீது ஒருவருக்கு அன்பு பிறக்கவேண்டும்; நம்பிக்கையும் நல்லெண்ணமும் தோன்ற வேண்டும், அச்சம் மறைய வேண்டும் என்று நாம் எழுதியிருந்தோம். இவை இல்லாத குறையினால் தான், இக்கோர சம்பவங்கள் நாட்டில் பல இடங்களில் நடைபெறுகின்றன. இந்நிலைமையைக் கண்டு அதிலும் பீஹார் மாகாணத்தில் நடைபெறும் சம்பவத்தைக்கண்டு தோழர் காந்தியாரும் பண்டித நேருவும் மனம் நொந்து அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்நிகழ்ச்சிகளால், நாட்டின் சுதந்திர வேட்கையை அறிந்தோ அறியாமலோ அழித்தவராவோம் என்றும், சுதந்திரத்திற்கு படுகுழி தோண்டியவராவோம் என்றும் மனம் புழுங்குகிறார்கள். காயிதே அக்ஜம் ஜனுப் ஜின்னா அவர்களும் வருந்துகிறார். உண்மையாகவே இந்நாட்டின் சுதந்திரம் இவ்வாறு படுகொலை செய்யப்படுவதைக் கண்டு எவரும் வருந்தாமலிருக்க முடியாது. இதனால் யாருக்கு இலாபம் என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இக்கலவரத்தை யடக்க யாருடைய துணையை தேடவேண்டியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இக்கலவரத்தால் யார் மாளுகிறார்கள்? யார் அஞ்சி வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள்? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்?

அன்னியத் துருப்புகளின் துணை தான் இன்று இருபாலராலும் வேண்டப்படுகிறது? அன்னியரைத்தான் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டு என்று கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக யிருக்கிறோம். அன்னியனே வெளியே போ! வெள்ளையனே வெளியே போ! என்று கூறப்படும் நேரத்தில். அன்னியனை சமாதானத்தை நிலைநாட்ட அழைப்பதும் வெள்ளையனை உயிரைக்காக்க துணைக்கழைப்பதுமான நிலை ஏற்படலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்நாட்டில் சுதந்திரத்தை விரும்பாத ஒரு மனிதனும் இருக்க முடியாது. யாவரும் சுதந்திரத்தை விரும்புகின்றனர்.

ஆனால், அச்சுதந்திரம்,

"வாழ்வுக்கு ஒளி தரவேண்டும்,
நம்பிக்கைக்கு ஆனந்தம் நல்கவேண்டும்,
உண்மைக்கு ஞானம் உதவ வேண்டும்,
அன்புக்கு ஆற்றல் அளிக்க வேண்டும்,"

என்று ஆசைப்படுகின்றனர். அவ்வாறு இல்லையானால், "நம்பிக்கை போய் ஏக்கம் பெருகி வாழ்வு கல்லறையாக மாறிவிடும்" என்று அஞ்சுகின்றனர்.

எனவே தான் நாம் கூறுகிறோம், மக்களுக்குள்ளிருக்கும் அவநம்பிக்கையும் வெறுப்பும் ஒழியவேண்டும்; ஒருவரையொருவர் நேச பாவத்தோடு வாழ கற்றுக்கொள்ள வேண்டும்; இதற்காக ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும் என்று.

ஆனால், நாட்டில் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் நடக்கும் போக்கு இதற்குத் துணைபுரியக் கூடியதாகயில்லை. வெறுப்பையும் பகையையும் வளர்க்கக்கூடியதாகவே யிருக்கிறது. அவநம்பிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஒவ்வொருவரும் அதாவது ஒவ்வொரு கட்சியாரும் அயலானின்—அன்னியனின் உதவியை நாடுவதில் அதிக கவனம் செலுத்திவருகிறார்களே யல்லாது தங்களுக்குள் நல்லுறவு ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துவதாகவோ அக்கறை கொள்வதாகவோ காணப்படவில்லை. இந்நிலைமை நீடிக்கவிடுவது எவ்வளவு பேராபத்தானது என்பதை பழைய சரித்திரங்களைக் கண்ணுறுவோர்களுக்கு விளங்காமல் போகாது. எனவே, உண்மையாகவே சுதந்திரம் விரும்பும் எவரும் இந்நிலைமையை வளரவிடக்கூடாதென்பதே நமது ஆவல்.

மற்றும் இன்று இந்நாட்டிலுள்ள பெரும்பாலான பத்திரிகைகளின் போக்கும் அதிக கவலையை அளிக்கக்கூடியதாகவே யிருக்கிறது. மக்களுக்குள் நல்லுறவு ஏற்படுவதற்கு உதவுவதாகவே யில்லை. இதற்குமாறாக பகையுணர்ச்சியை வளர்க்கக்கூடியதாகவே யிருக்கிறது. இன்று இந்நாட்டில் கலவரங்கள் இவ்வளவு தூரம் வளர்வதற்கு இத்தகைய பத்திரிகைகள் ஓரளவுக்குக் காரணம் என்றால் எவராலும் மறுக்கவே முடியாது. இவ்வாறு அவநம்பிக்கை அதிகரிப்பதினால் யாருக்கு லாபம்? சுதந்திரத்தை பெறமுடியுமா? பலாத்காரத்தினால் சுதந்திரம் அடைந்தாலும் அது நிலைக்குமா? மக்களுக்குள் சகிப்புத்தன்மையோ நல்லெண்ணமோ ஏற்படாதவரை, அமைதியானவாழ்வு எங்ஙனம் ஏற்படமுடியும்? எவ்வளவு காலத்திற்கு பலாத்காரத்தினால் ஆட்சி நடத்த முடியும்? மக்கள் மனத்தில் கொதிப்பு இருந்துவரும் வரை திருப்தியான வாழ்வு நிலவ முடியுமா? மக்கள் அதிருப்தியுடன் வாழ்ந்த எந்த நாடுதான் நிலைத்து நிற்கிறது? எனவே, நாட்டின் நலத்தில் கருத்துடையவர்கள் மக்கள் மனத்திலுள்ள மனக்கசப்பை போக்கப் பாடுபட வேண்டும். அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் மனக்கசப்பு ஒருசிறிதும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மக்களுக்குள் பகையையுண்டு பண்ணக்கூடிய அதிலும் இந்து முஸ்லிம் என்ற வேற்றுமையை வளர்க்கக்கூடிய முறையில் எந்த உருவத்தில் யார் எதைச் செய்த போதிலும் கண்டித்து உடனே தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். வெள்ளம்வருமுன் அணைகட்டுவது தான் புத்திசாலித்தனமாகும்.

சர்க்காரும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். வங்கம் பம்பாய், பீஹார் முதலிய மாகாணங்களில் நடைபெறும் கலவரங்களைப் பார்த்தால் சர்க்கார்கள்போதிய எச்சரிக்கையாகயிருந்திருப்பதாக எண்ணுவதற்கில்லை என்றே தோன்றுகிறது அவைகள் விடும் அறிக்கைகளிலிருந்து, கலவரம் நடந்தபிறகு அதைப் பரவவிடாமல் தடுப்பதிலும் மக்களை பாதுகாப்பதிலும் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஒரு சிறுது பாகமாவது முன்னெச்சரிக்கையுடன் செய்யப்பட்டிருந்தால் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது. பொது மக்களும் சர்க்காரும் இனியாவது முன்னெச்சரிக்கையான காரியங்களைச் செய்ய முன்வர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

இருக்வேதம் 24வது வசனம் கூறுகிறது. முதல் மனிதன் புத்திரியை மணந்திருக்கிறானென்று யஜுர்வேதம் 95வதுவசனம் கூறுகிறது. சோமபானம், சுராபானம் என்னும் மயக்கவஸ்துக்களையுண்டு செய்யவும் அதனையுட்கொள்ளவும் யஜுர்வேதம் 111ம் வசனம் கூறுகிறது. வசிஷ்டர் வருணன் வீட்டில் தானியம் திருடப்போனதாக இருக்வேதம் 20வது வசனம் கூறுகிறது. நதிகள் ஓவென்று ஓடிக்கொண்டிருக்கிறதே, இவைகள் தூங்குகிறதில்லையாவென்று ஒரு ரிஷிபரிதாபப் படுகிறார். சந்திரன் ஏன்வெண்மையாயிருக்கிறான் இவன் எந்த விடத்திலிருந்து புறப்படுகிறான் என்று இன்னொரு ரிஷிகேட்கின்றார்! இன்னும் புராண இதிகாசங்களை யாராயப்புகுவோமானால் விறலிவிடுதூது கிள்ளைவிடுதூது, முதலியவற்றிலுள்ள சிற்றின்பவாடை பெருங்காய டப்பியைத் திறந்தாற்போன்று வீசுகிறது. சோவியட் புஸ்தகங்கள் முதலியவற்றை தடைச்சட்டங்கள் போட்டு நிறுத்துவதற்கு பதிலாக இப்புராண இதிகாசங்களைத் தடைச்சட்டத்தினால் நிறுத்த வேண்டியது பெருபகாரமாகுமென்பதே எனது அபிப்பிராயம்.

பிரம்மா தன் புத்திரியையும், கிருஷ்ணன் குப்ஜலையையும், இராதையையும், சிவன் ரிஷிபத்தினி மகளையும், விஷ்ணு ஜலந்தரனுடைய மனைவி பிருந்தாவையும், இந்திரன் கௌதமர் மனைவி அகலிகையையும், சூரியன் குந்தியையும், சந்திரன் பிரகஸ்பதியின் மனைவி தாராவையும், வாயு வானரத்தின் மனைவி சேசரியையும், வருணன் அகஸ்தியர் தாய் ஊர்வசியையும், பராசர் மச்சகந்தியையும், வியாசர் வேலைக்காரியையும், பாண்டவர் துரௌபதியையும், ஈனவொழுக்க மாடியதாகவும், தேவர்கள் குடியர்களென்றும், வாமனர் பலியை மோசஞ் செய்தனரென்றும், இராமர் வாலியை வஞ்சனை செய்தாரென்றும் விளக்கமாகக் கூறுகின்றனவே? இந்நூல்களையும், இதற்குரிய மதங்களையும் நீக்கி பகுத்தறிவை மேற்கொண்டு நடக்க வேண்டுமென்று சுயமரியாதை இயக்கம் கூறுவதில் என்ன தப்புஇருக்கிறதென்று கேட்கிறேன்.

இன்னோரன்ன அஞ்ஞானமே சூழ்ந்த வேதாதி புராணங்களின் உற்பவமோ பெரிதும் அந்த காரத்திற்கிடமாகவே யிருக்கிறது. "நான்கு வேதத்தைக் கடவுள் பிரமாவுக்குப் போதித்து, பிரமா முனிவர்களுக்கு போதித்ததாக நான்கு பாயிரத்தில் கூறுகிறது. பிர்மா அனாதியான வேதத்தை அக்கினி, வாயு, சூரியன் இம்மூவர்களிடத்தினின்று வெளிப்படுத்தியதாக மநு தர்ம சாஸ்திர முதலத்தியாயம் கூறுகிறது.

மற்றோரிடத்தில், நாய், நரி, கழுதை பசு, தவளை முதலிய ஜந்துக்கள் வயிற்றில் மனிதர் பிறந்து வேதங்களை யெழுதியதாகக் கூறியிருக்கின்றது! வேதங்களை சில ரிஷிகளும் சில அரசர்களும் எழுதியதாக இருக்கு வேதம், 2, 8, 4 வது வாக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறது. வீரங்கர் என்னும் அரசனுடைய ஐந்து பிள்ளைகளும் வேதத்தின் சிறந்த கர்த்தாக்களாயிருந்ததாக யசுர் வேதம் 72-வது வசனம் கூறுகிறது. நான்கு வேதம் எழுதியவர்களில் யாரும் நரமனிதர் இல்லையென்று அதே யசுர் வேதம் 111 வது வசனத்தில் கூறியிருக்கின்றது.

இவ்விதம் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இடர்ப்படும் கூற்றுக்கள் யாவும் பொய்யென்றும் பிராமணீயத்தைப் பெருக்குவதற்காகவே அவ்வேதங்கள் எழுதப்பட்டனவென்றும் சுயமரியாதை யியக்கத்தார் பகுத்தறிந்து கூறினால் அதில் என்ன ஆக்ஷேனை யிருக்கிறதென்று கேட்கிறேன்?

இங்ஙனமே பரந்த இராமாயண முதலிய இதிகாசங்களும் பார்ப்பனரல்லாதாரை யடிமைப்படுத்தும் ஒரு சூழ்ச்சி நூற்களே தவிர அந்நூல்களினின்று மனித சமூகம் அடையத் தக்க நன்மை ஒரு அணுவளவேனுமுண்டா? அந்நூற்களில் புத்த வியாரங்களைப்பற்றியும், புத்த குருக்களைப் பற்றியும் ஆங்காங்கு கூறியிருக்கின்றமையால் அந்நூற்களில் காணப்படும் பிராமணீயத்தின் ஆட்சி வேறென்னூல்களிலுமில்லையென்றே கூறலாம்.

ஐயாயிர வருடங்களுக்கு முன்னர் கலியுக ஆரம்பத்தில் ஜீவித்திருந்த வியாசரால் எழுதப்பட்டு, புனித நூலாகக் கொண்டாடப்பட்டு வரும் பதினெண் புராணங்களைக் கவனிப்போமானால் அவைகள் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட விலங்குகளென்றே துணியலாம். அன்றியும் 2600 வருடங்களுக்கு முன் பிறந்த புத்தரைப்பற்றி சிவ புராணம், பர்வர்த்தம் காண்டத்திலும், 700 வருடங்களுக்கு முன்னிருந்தவராகும் இராமானுஜாசாரியரைப் பற்றி இலிங்க புராணத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்றால், 5000 வருடங்களுக்கு முன்னிருந்த வியாசர் அப்புராணங்களை எழுதினாரென்பதை எவ்வித பொய்யிற்கு ஒப்பிடலாமென்று கேட்கிறேன்? தவிர முகம்மதிய அரசராகிய ஜிகாங்கீர் காலத்தில் அமெரிக்கா தேசத்தொரு கிறிஸ்தவ பாதிரியினால், புகையிலையையும், உருளைக் கிழங்கையும் கொண்டு வந்ததாக (Tajuk) டாஜுக் என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கின்றார். சரித்திரக்காரரும் இதனை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே புகையிலை இந்தியாவுக்கு வந்தது 850 வருடங்கட்குட்பட்டதென்பது தேற்றமாம். ஆனால் புகையிலையைப்பற்றி பிரமாண்ட புராணத்தில் "பிராப்தே வியுகே" என்னும் சுலோகத்திலும் பத்மபுராணம் "தாம்பிரபானரதம்" என்னும் சுலோகத்திலும் கூறியிருப்பதாவது. "யாரொருவன் இக்கலியுக அஞ்ஞான காயத்தில் புகையிலையை உபயோகிக்கிறானோ அவன் நரகத்திற்குப் போவான். தருமவான் சுருட்டுபிடிக்கும் பிராமணனுக்கு தருமஞ் செய்தால் அவன் நரகத்திற்குப் போவான். மேலும் அப்பிராமணன் கிராமத்தில் பன்றியாய்ப் பிறப்பான் என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது புகையிலையை யுபயோகித்து வரும் நூற்றுக்கு 90 கணக்கான பிராமணர்கள் கிராமத்தில் பன்றிகளாய்ப் பிறக்கப் போவதைப் பற்றியும், அல்லது இப்போது கிராமத்தில் பன்றிகளாய்ப் பிறந்திருக்கும் புகையிலையை உபயோகித்த பிராமணரைப் பற்றியும் நாம் பரிதாபப்பட வேண்டியதாயிருந்தாலும், 400 வருடங்களுக்குட்பட்ட புகையிலை 5000 வருடங்கட்கு முன் எழுதிய புராணத்தில் எங்ஙனம் புகுந்ததென்பதற்கு எந்த வைதிகராவது விடையிறுக்க முன் வரக்கூடுமோ என்று கேட்கிறேன்?

மேலும் ஐயாயிரம் வருடத்திற்கு முன்பிருந்த அந்த வியாசர் கூறும் பாகவதம் கூறுவதாவது: நாரதர் தன் மனதில் சஞ்சலமடைந்து பத்திரிகாரண்யஞ் சென்று தவம் புரிந்து விஷ்ணுவை தரிசித்தாராம். அப்போது விஷ்ணுவானவர் நாரதரைப் பார்த்து உலகம் எப்படி யிருக்கிறதென்று கேட்க நாரதர் விடையளித்ததாவது: முசல்மான்கள் ஈஸ்வராலயத்தை யிடித்து நாசமாக்கி விட்டார்கள், ஆகவே ஞானவாபி என்றழைக்கும் கிணற்றில் ஈஸ்வரன் விழுந்து மூழ்கிவிட்டார் என்றனராம். பிறகு நாரதரும் விஷ்ணுவும் அதற்காக துக்கங்கொண்டாடினர்களோ இல்லையோ நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் நமது நெற்றிக்கண் வீரராகிய ஈஸ்வரன் குளத்தில் வீழ்ந்து மாண்டுபோனது 200 வருடங்களுக்கு முன் அரசாண்ட ஔரங்கஜீப் காலமாகுமென்பதைப் பள்ளிப்பிள்ளைகளும் ஒப்பக்கூடியதாயிருக்க, 5000 வருடங்களுக்கு முன்பிருந்த வியாசர் எழுதிய புராணத்தில் காணப்படுவதற்கு எந்தவைதிகர் பதிலிறுக்கக்கூடுமென்று கேட்கின்றேன்? முஸ்லீம் அரசர்களைத் தம் வசப்படுத்துவதற்காக அல்லவா உபநிஷத்தை புகுத்திவிட்ட நம் வைதிகர்கள் இனி ஆங்கிலேய உபநிஷத்தையும், சுயமரியாதை உபநிஷத்தையும் புகுத்த முன் வரக்கூடுமா?

மக்களின் வாழ்க்கைக்குரிய எல்லாத் துறைகளிலும் பிராமணீயத்தைப் புகுத்தி பெரும்பாலான மக்களை யடிமைகொண்ட பார்ப்பனர் அவர்களின் சுயநலத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தெய்வம், மோக்ஷம், நரகம் என்பவைகளின் பேரால் செய்துள்ள சூழ்ச்சிகள் அளவிடுதற்கரியனவாம். பிறந்தது முதல் இறக்கும் வரையும், இறந்த பிறகும் புரோகிதத்தில் நம்மனோர் சிக்குண்டுழல்வதற்கு என்னென்ன தந்திரங்களை மேற்கொள்ள வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து முடித்துள்ளதுதான் இந்துவேதமே தவிர நமது அறிவு, உயிர், உடல், இம்மூன்றுக்கும் எவ்வித உரிமையும் கொடுக்கக்கூடிய நிலைமையில் இந்துமதமில்லையென்பது மிகையன்றே.

இந்துமத தேவர்கள் உலகத்தில் மனித அவதாரமாகப் பிறந்தால் குள்ளப் பார்ப்பானாக பிறப்பாராம் அல்லது கெட்டையான கிழப்பார்ப்பானாக பிறப்பாராம். வாமனவதாரமும் சுந்தரமூர்த்தியை யாட்கொள்வதற்காக கிழப்பார்ப்பனராக பிறந்ததும் இதற்குச் சான்றும். ஏன் அந்த அந்த தேவர்கள் கவுண்டராகவும், செட்டை நாடாராகவும் பிறக்கக்கூடாதென்று யோசித்துப்பாருங்கள்! இன்னும் இவைபோன்ற நூற்றுக்கணக்கான உதாரணங்களை யெடுத்தாண்டு பிராமணீயத்தின் வஞ்சனையை நிலைநாட்டலாம். இன்னோரன்ன சூழ்ச்சித்திறத்தினின்று மக்களை விடுவித்து பகுத்தறிவோடுகூடிய உலகியலை விளக்கி சுதந்தர வீரர்களாகவும், சமதர்ம நேயர்களாகவும், நிகழும் படிச் செய்யவே, தன்மதிப்பியக்கம் பல வித யெதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், பாடுபட்டு வருகின்றபடியால் தேசத்தின் பொதுநலத்தை நாடும் ஒவ்வொருவரின் கடமையும் இவ்வியக்கத்திற்கு ஆதரவு தருவது என்பதோடு குறிப்பாக ஒவ்வொரு தமிழ் மக்களின் கடமையுமாகும் எனவலியுறுத்துகிறேன்.

2-ம் பக்கம் தொடர்ச்சி

செய்து வரலானார்கள். இவர்களது தேவை பண்டமாற்று முறையினால் செவ்வனே பூர்த்தியாய் வந்தது. அக்காலத்தில், உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைத்து வந்தது அல்லது உழைப்புக்குத் தகுந்த பயனை அடைந்து வந்தார்கள் என்றோ அல்லது தேவைக்கானது கிடைத்து வந்ததென்றோ சொல்லலாம். இதனால் மக்கள் துன்பப்படாமல் யாவரும் இன்புற்று வரலானார்கள் என்று கருதலாம்.

பின், எப்பொழுது மக்கள் துன்புறலானார்கள் என்றால், என்று மக்களின் உழைப்பின் பயனாக் கிடைக்கும் பொருட்களுக்கு மதிப்பு ஏற்படுத்தினார்களோ அதாவது உழைப்புக்குப் பண்டத்திற்குப் பதில் பணம் கொடுப்பதென்று நாணய முறையை ஏற்படுத்தினார்களோ அன்று தொட்டே மக்கள் துன்பப்பட நேரிட்டதென்றே சொல்லலாம். இதனால் பண்டத்திற்கு மதிப்பு ஏற்படுத்தியது, நாணய முறை வகுத்தது தவறு என்று நாம் சொல்லவரவில்லை; உழைப்புக்கு மதிப்பு (Value) ஏற்படுத்தாமல் பண்டத்திற்கு மதிப்பு ஏற்படுத்தியது தவறு என்றுதான் நாம் கூறுகிறோம். இம்முறை ஏற்படுத்தியதினால்தான், உழைக்கிறவன் உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தைப் பெறமுடியாமல் போனதோடு, தனக்குத் தேவையான பண்டங்களை பெற முடியாமலும் போய்விட்டது. இது சற்று நிதானமான விஷயம். சிறிது நிதானமாக சிந்தித்துப் பார்த்தால் தான் நாம் சொல்லுவதின் பொருள் விளங்கும்.

உதாரணமாக ஒரு விவசாயி, உழுது பயிரிடுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு நெசவாளி துணி நெய்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு மட் பாண்டம் செய்கிற தொழிலாளி மட் பாண்டம் செய்து வருகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் மதிப்பு ஒரே தன்மையதாக யிருந்தால்தான் மூன்று பேர்களுடைய தேவையும் சரியாக பூர்த்தி செய்யக்கூடியதாக யிருக்க முடியும். அவ்வாறு சம மதிப்புடன் நாணய மாற்று முறை இருந்திருக்குமேயானால் இம் மூவர்களில் எவரும் கஷ்டப்பட வேண்டிய-தேவைக்கான பொருட்களை வாங்கும் சக்தி யில்லாதவர்களாக இருக்க வேண்டிய நிலை ஏற்படாது. உழைப்புக்கு மதிப்பு (value) வைக்காததால் பண்டத்திற்கு மதிப்பு வைத்ததால், உழைத்தும் அதற்கான பயனை அனுபவிக்க முடியாதவனாகிறான் இதனால் ஒருவனது உழைப்பின் பயனை-மதிப்பை-நாணயத்தை மற்றொருவன் அடைய முடிகிறது. ஒருவன் பற்றாக்குறையினால் வறுமையில் வாடவும் மற்றொருவன் தனது உழைப்புக்குமேல் பயனை மதிப்பை நாணயத்தைப் பெறவும் முடிகிறது. எனவேதான், ஒரு சிலருக்கு செல்வம்-பெருகவும் பலர் வறுமையில் வாடவும் ஆகிறது. இதிலுள்ள பேதங்கள்-வேற்றுமைகள் ஒழியவேண்டுமானால், பண்டத்திற்குள்ள மதிப் (value) பை மாற்றி உழைப்புக்குத் தகுந்த மதிப்பு ஏற்படுத்த வேண்டும் இதில் புரட்சி-மாறுதல் ஏற்படவேண்டுமென்கிறோம். இத்தகைய மாறுதல் புரட்சி தோன்றுவதற்கு இரத்தம் சிந்தவோ, உச்சிமீதில் வானிடிந்து விழவோ அவசியமென்ன? மருட்சி கொள்ள காரணமென்ன? மனமாற்றம் தானே தேவை? நிலையை சீர்தூக்கிப் பார்த்து சிந்தித்து மாற்றியமைக்கும் ஆற்றல் ஏற்படவேண்டும்.

மற்றும், ஒவ்வொருவரும் உலக மக்களின் ஒரு பகுதி, ஒரு அங்கம், ஒருவரை ஒருவர் புறக்கணித்துத் தனித்து இயங்க முடியாது. மனிதவர்க்கமே ஒரு குடும்பம் போன்றது. அதனால் ஒவ்வொருவருடைய உழைப்பும் உலகத்தின் பொது சொத்து. ஏனெனில் உழைப்பின் விளைவுதான் பொருள். எனவே, உழைப்பை சொத்துக்கு சமமானதென்கிறோம். அவ்வாறு கருதும்போது ஒருவனது உழைப்பின் பயனை மற்றொருவன் தனிப்பட்ட முறையில் தனக்குச் சொந்தமானதாக உரிமையானதாக உரிமை பாராட்டுவது எவ்வாறு பொருந்தும்? எவ்வாறு நியாயமாகும், இதனால் விளையும் தீமை என்ன? என்பனவற்றை அடுத்த இதழில் விளக்குகிறோம். ஏனெனில், இப்பொருள் மூளையை வரட்சி செய்யக்கூடியதான்படியால் உங்கள் மூளையை அதிகமாக வரட்சிப் படுத்தப் பிரியப்படவில்லை.

பிற அடுத்த இதழில்.

## எழுச்சியுற்ற மாணவன்

(மு. கருணாநிதி)

கறுப்புடையை மாட்டிக் கொண்டு திராவிடத்தின்
இழுக்கு நிலை காட்டிக்கொள்ள எழுந்தது பார்
நெருப்புமிழ் பட்டாளம் நெஞ்ச எரிச்சலுடன்!
உறுமுகின்றார் சமயப்பித்தர்! உயர்ந்த சகாப்தம்!
'நிராதுதிய எண்ணத்தார் சூழ்ச்சி வேரோடுபெயர்க்க
வீராதி வீரர் முழக்கம்! வைதிகர் கலக்கம்!'
என்றொரு வீரன் பேரிகை கிழித்தான்.

'கொந்தளிப்பில் குமுறுகின்றார் எங் நாட்டார்'
இதைக் குயில் கூவிற்று.

"சோலையிலே-தென்றலிலே 'சொகுசு' பின்னர்
சொந்த நாட்டைக் காப்பாற்ற சுழற்று வாளை!"
சொன்னார் பெரியார்.

"காதலிலே—கவிதையிலே களப்போகும் பேச்சு,
கணவனுக்கும்—மனைவிக்கும் திராவிடமே மூச்சு"
இது கவிஞர் கருத்து.

இந்நாட்டான் இங்கு வாழ்ந்தான் ஈடில்லான்
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்
தமிழ் நாட்டான் தலைகுனிந்தான்! இதோ நிமிர்ந்தான்!
எழுச்சியுற்ற மாணவன்தான் ஏறுநடை சிங்கந்தான்! இனி
கொழித்துவிட்ட உமிகள்தான் குள்ளநரிக் கூட்டத்தார்.
பழித்துவிட்டான் பகுத்தறிவால்! பக்திமதக் கடவு
[ளெல்லாம் பாழ்! பாழ்!!
விதியென்பார், வினையென்பார், வாழ்வு பொய்யென்பார்
மதிபெற்ற மாணவன் இதை நம்பமாட்டான்.
வாழத்தான் வேண்டுமென்றும் வாழ்க்கையிலே ஆரியத்தை
சாடத்தான் வேண்டுமென்றும் சபதம் ஒலித்து விட்டான்
பாட்டுக்குள் பதிந்துவிடும் பாயும் இளமைகாள் நும்புகழ்!
நாட்டுக் குழைப்பதிலே 'நான்முந்தி' என்று நிற்பீர்!
வாழியவே வாழி!


### "நம் நாடு"

நம் நாட்டு மக்களின் அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றம் கருதி ஆரம்பிக்கப்படும் ஓர் தமிழ் வாரப் பத்திரிகை. விரைவில் வெளிவருகின்றது.

வருட சந்தா ரூ. 4-0-0
ஆறுமாத ,, 2-0-0

விபரங்களுக்கு:—
மானேஜர்,
"நம் நாடு"
பீம நகர், திருச்சி.


தஞ்சை தோழர்கள் பெரியார் அவர்களை 26-10-46 காலை 9.மணிக்கு தஞ்சை இரயிலடியில் கண்டு இயக்க சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

எண்ணத்துடனுமே, யுத்தத்தில் முனைந்து நிற்பதை விளக்கிக் காட்டினர். தேசியம் தேசியம் என்று முதலாளிகள் கூறுவதெல்லாம் தொழிலாளரை வஞ்சிப்பதற்காகவேயல்லாமல் வேறல்லவென்றும், அம்மாதிரி பிறரை வஞ்சிப்பதற்காகவே ஏகாதிபத்யமுறை ஏற்பட்டிருப்பதால், என்றும் தலைகாட்டாதவாறு அதைக் குழி தோண்டிப்புதைத்துவிட புரட்சி இன்றியமையாதது; அதைவிடுத்து, அஹிம்சை அஹிம்சையெனப் பின்வாங்குவது சற்றுந்தகாதென்று பொருள்படுமாறு எடுத்துரைத்தார்.

சில இராஜ்ய வாதிகளும், ஆசிரியர்களும் அவரை அராஜரிக வாதியெனத் தாக்கியுள்ளார்கள். பலாத்காரத்தை அவர் ஆதரிக்கவில்லை; ஆனால் அப்போதைய சமூக அமைப்பில், வேறு எவ்விதத்திலும் அவருடைய லட்சியத்தை யடையக்கூடாததால் அம்முறையைக் கையாளவேண்டியது அவசியமாய் விட்டது.

1915ல் ஐரோப்பாவிலுள்ளவர்களும், யுத்தத்திற்கு ஆதரவளிக்காதவர்களுமான சமூக சமதர்மவாதிகளின் மகாநாடொன்று கூட்டி சர்வ தேச பொதுவுடமைச் சங்கத்தை ஸ்தாபித்தார்.

தொழிலாளரின் இயக்கம் சர்வதேச நோக்கமுடையது. எல்லாத் தேசங்களிலும் தொழிலாளர்களுக்குள்ள குறைகள் ஒன்றேயாகும். எத்தேசத்தில் பிறந்து எம்மதத்தினனாயினும் சரி, தொழிலாளி என்றால் அவனை உய்விக்க மற்ற வகுப்பாரில் எவரும் கிடையாது. ஆகையால் முன்னேற்றமடைய வேண்டுமாகில் அவர்கள் ஒன்று சேர்ந்து முற்படவேண்டுமென்று சந்தேகமறத் தெரிவித்தார். கார்ல் மார்க்ஸின் தத்துவங்களை நன்குணர்ந்து அவைகளின் சாஸ்வதமான உண்மையை உலகிற்கெடுத்துரைத்தார். ரஷ்யப் புரட்சி இயக்கங்களில் அவருக்கேற்பட்ட அனுபவங்களும், உலகெங்கும், தொழிலாளரின் நிலைமையைப் பற்றிய தகவல்களை அறிந்திருந்தாலும், இங்கிலிஷ், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், போலீஷ் போன்ற பாஷைகளில் அவருக்கேற்பட்ட பாண்டியத்தித்தின் உதவியாலும், சர்வதேச தொழிலாளரியக்கத்திற்கு அவர் சேவை புரிவதில் அதிகமான கஷ்டங்கள் தோன்றவில்லை. ஒவ்வொரு தேசத்திற்கும் ஆங்காங்குள்ள நிலைமைகளை யுத்தேசித்து தனிப்பட்ட திட்டங்களின் அவசியத்தையும் திட்டமாக எடுத்துக் கூறியுள்ளார்.

1917ம் வருஷம் ரஷ்யாவில் புரட்சி இயக்கம் அதி தீவிரமாய் கிளம்பி, ஜாரின் ஆதிக்கத்தை ஒழித்து விட்டது,

புரட்சி யாரம்பத்தில் லெனின் சுவிட்சர்லாந்திலிருந்தார். முன்னேற்றத்திற்கெல்லாம் முட்டுக்கட்டை போடும் பிரிட்டிஷ் அதிகாரிகள், ரஷ்யாவிற்கு அவர் செல்லுவதை பலமாக எதிர்த்தனர். ஆகையால் ஜெர்மனி மார்க்கமாய்த் திரும்ப வேண்டி நேரிட்டது.

ஜாரின் ஆட்சியை ஒழித்து விட்டதால் மட்டும் பயனில்லை. இனி நடக்க வேண்டிய முறைகளைப் பற்றியே யோசிக்க வேண்டும். பாமர ஜனங்கள் ஆயுதந்தரித்து சோவியத்து சபைகளைப் பலப்படுத்த வேண்டும். கிராமாந்தரங்களில் வேலை செய்து கிளர்ச்சிகளைப் பெருக்கி, முதலாளிகளின் அதிகாரத்தைப் பிடுங்கி, சமூக சமர்மத்தை அடிப்படையாகக் கொண்டு, ஜன சமூகத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று தீவிரப் பிரசாரத்தை மேற்கொண்டார்.

நாற்புறமும் அவருக்கு விரோதிகள் கிளம்பினர். ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி என்ற பேதமற்ற தர்மத்தை பணக்காரர்களும் பிரபுக்களும் ஒத்துக்கொள்ளவில்லை. லெனின், ஜெர்மனியன் ஆட்சியை ரஷ்யாவில் ஸ்தாபிக்க முற்படுவதாகவே பொய்ப் பிரசாரங்கள் எங்கும் கிளம்பின. லெனினுக்கு ஏற்பட்ட விரோதிகளுக்குக் கணக்கில்லை தோல்வியும் ஏற்பட்டது.

ஆனால், லெனின் அதனால் சோர்வடையாமல் ஒரே ஊக்கத்துடன் பிரசார வேலையிலீடுபட்டதன் பயனாக, அதே வருஷம் ஜூலை மாதம் நடந்த தேர்தலில் அவருடைய போல்ஷிவிக் (தீவிர பொதுவுடமை) கட்சியாருக்கு அதிகப்படியான ஸ்தானங்கள் கிடைத்தன. அதிகாரம் கிடைத்தவுடன் தாமதமின்றி, முன் வைத்த காலைப் பின் வைக்காது எடுத்த காரியத்தை முடித்தாக வேண்டுமென்று சுறு சுறுப்பாய் வேலை துவக்கினர்.

உடனே 'பாமர ஜனங்களுக்கே சர்வாதிகாரம் உரித்தானது' என்று பறைசாற்றி ஜனங்களுக்கிடையில் தாண்டவமாடி பேதம் விளைவித்துக் கொண்டிருந்த ஏழை, பணக்காரன் என்ற வகுப்புவாத உணர்ச்சியை அடியோடு ஒழித்துவிட முற்பட்டார்.

மகாயுத்த உடன்படிக்கையின் காரணமாய் சமாதானம் நிலைத்தவுடன், சர்க்காரின் தலைமை ஸ்தானத்தை மாஸ்கோவிற்கு மாற்றினர். தம்முடைய் கக்ஷிக்கும், இதரர்களுக்கும் இனி ருஷியர் எவ்விதங்களில் முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று எடுத்துரைத்தார்.

## நாற்புறமும் குழப்பங்கள்

ஜெகோஸ்லோவேகியாவில் அவருக்கு விரோதமான கிளர்ச்சிகள் வலுத்தன. யுத்தக்கடனை மறுத்து விட்டதற்காக பிரிட்டிஷார் சொற்படி ரஷ்யாவிற்கு ஆகாரதிகள் மற்ற தேசங்களிலிருந்து அனுப்பப்படவில்லை. எனினும் லெனின் ஊக்கம் குறையாது, ஜனங்களிடையே தமது கொள்கையைப் பற்றிப் பிரசாரம் செய்வதை மும்முரமாய்க் கைக்கொண்டார். உள் நாட்டில் கிளர்ச்சிகளுக்குக் காரணபூதமாயிருந்து தொந்தரவு விளைவித்து வந்த மென்ஷிவிக்குகள் 1921ல் இறுதியாக முறியடிக்கப் பட்டனர்.

ரஷ்யாவை மின்சாரமயமாக்குவதைப் பற்றி ஒரு விரிவான யதாஸ்தை லெனின் 1920ல் சமர்ப்பித்தார். ஆலைப் பண்டங்களை சிக்கன முறையில், ஏராளமாய்த் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும், தனிப்பட்ட நபர்கள் வேளாண்மையில் ஈடுபடுவதைக் காட்டிலும் சிலாக்கியமானதான சமூக வேளாண்மையில் சுலபமாய் அனைவரும் விளைபொருட்களைத் தயாரிப்பதற்கான வழிகளையும் விரிவாக அந்த யதாஸ்தில் குறிப்பிட்டார்.

தன்னுடைய சௌகரியங்களைக் கொஞ்சமும் கவனியாது, சதா ஜன சேவையில் ஈடுபட்டு வேளைக்குணவின்றி உழைத்த தன் பயனாய் அவருடைய சரீரசுகம் கேடுற்றது. 1923ம் வருஷத்தில் வலது புறம் பாரிச வாய்வினால் பாதிக்கப்பட்டு, 1924ம் வருஷம் ஜனவரி மாதம் 21தேதி உயிர் நீத்தார்.

அவரிடம் ரஷ்யர் கொண்ட அன்பு அளவற்றதென்பது, கோடிக்கணக்கான மக்கள் அவருக்குக் காட்டிய கடைசிக் கல்லறை மரியாதையிலிருந்து புலப்படுகின்றது. மாஸ்கோ காட்சி சாலையில் இன்றைக்கும் அவருடைய உடல், அழிந்து போகா வண்ணம் காப்பாற்றி வைக்கப் பட்டிருக்கின்றது.

## அழியாப் புகழ்

தாய் நாடு மட்டுமல்ல, ஜனசமூகத்திற்கே தன்னுடைய தத்துவங்களைப் பறைசாற்றி ஏழைகளுக்காகத் தன் ஆவியையே அர்ப்பணம் செய்த லெனினை எவரும், என்றைக்கும் மறக்க முடியாது. இராஜ்ய சுதந்திரம் மட்டுமல்லாது பொருளாதார சுதந்திரத்தின் அவசியத்தை உலகிற்கெடுத்துக் காட்டி, நாம் அனைவரும் கடவுளின் மக்கள் நமக்குள் வேற்றுமையை அவர் ஒருபொழுதும் சகியார்; என்பதை நிதர்சனமாய்க் காண்பித்த லெனின் அழியாப் புகழ் பெற்றுவிட்டார். ரஷ்யாவில் இப்பொழுது கையாளப்பட்டு வரும் இரண்டாவது ஐந்து வருஷ திட்டம்" என்பது லெனினுடைய யாதாஸ்தைப் பின்பற்றியதேயாகும். முதலாளிமயமான உலகெங்கும் பொருளாதார நெருக்கடியின் காரணமாய் ஜனசமூகம் தத்தளித்துக் கொண்டிருக்க லெனினைப் பின்பற்றிய ரஷ்யாவில் மட்டும் எவருக்கும் சௌகர்யக்குறைவேயில்லை என்று நாம் கண்கூடாகக் காண்பதிலிருந்து லெனின் போதித்த கொள்கைகள் அனுபவ சாத்தியமில்லா பகற்கனவல்லவென்பது வெளியாகி விட்டது.

---

செய்திகள்:—

சென்னை இளைஞர் சொற்போர் கழக ஆதரவில் 22-10-46ல் பெரியார் பிறந்த நாள் விழா தோழர் எ. எஸ். இராஜன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

★ ★ ★

புதுவையில் 20-10-47ல் தோழர் ம. நோயேல் அவர்கள் தலைமையில் பெரியார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram (N. A.)